## இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, சென்னை-38

எண்: PB/LW/226/CC /Misc

பணியாளர் பிரிவு,
தேதி-28/08/2018

### சுற்றறிக்கை

பொருள்: ஐ.சி.எப். பணியாளர்கள் / குடியிருப்புவாசிகளின் குடியிருப்புகளின் பராமரிப்பு மற்றும் தூய்மை.

*****

வருங்கால சந்ததியினருக்காக இயற்கை வளங்களைப் பாதுகாத்திட ஐ.சி.எப். சுற்றுப்புற கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. இக்கொள்கையானது பாதுகாப்பான மற்றும் இயற்கையோடு இணைந்த சுற்றுச்சூழலை உருவாக்க இதன் உறுப்பினர்கள் மற்றும் சமூகத்திற்கு சில வழிகாட்டுதல்களை அளிக்கிறது. இந்திய அரசாங்கமும் "தூய்மை இந்தியா" திட்டத்தின் மூலம் இதை வலியுறுத்துகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு தொழிலாளர்கள் மற்றும் குடியிருப்புவாசிகளுக்கு இச்சுற்றறிக்கை மூலம் அவர்களின் குடியிருப்புகளின் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. அனைவரும் குடியிருப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள குப்பைத்தொட்டியில் மட்டுமே குப்பைகளைப் போட வேண்டும். மேலும் தொழிலாளர்கள் குப்பைகளையும் / எந்த வகையான கழிவுகளையும்/ வேறொரு இடத்தில் தூக்கி எறிவதைத் தவிர்க்க வேண்டும். வீட்டுக்கு வீடு வந்து குப்பைகளை சேகரிக்கும் வசதியை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். சுற்றுப்புற சூழலுக்கு எதிரான எந்த ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடுவது கூடாது.

மேற்கூறிய அறிவுறுத்தல்களை மீறும் தொழிலாளர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

எஸ்.பி.ஓ/நன்னலம்